தரம் 10 11

# O/L தமிழ்

மொழியும் இலக்கியமும்

## தமிழர் பண்பாடு

ZOOM ONLINE CLASS

சரியான றைத்

தெரி யுங்கள்

TUTE 66



The Best TAMIL ACADEMY

அகரம்

தினேஸ் ONLINE ACADEMY

REGISTER NOW

0778054232

தமிழ் ஆசான்

"அகரம் தினேஸ்"

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

## தமிழ்ப் பண்பாடு

**வணபிதா தனிநாயகம் அடிகள்**

**பரந்த உலக மனப்பான்மை என்றால் என்ன?**

பரந்த உலக மனப்பான்மை என்பது ஒரு தனிநபரின் சொந்த கலாச்சாரம் மற்றும் அனுபவங்களுக்கு அப்பால், உலகின் பல்வேறு கலாச்சாரங்கள், நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறைகளைப் புரிந்து கொள்ளவும் மதிக்கவும் திறந்த மனதுடன் இருக்க வேண்டும். இது மற்றவர்களின் பார்வையைப் புரிந்து கொள்ளவும், அவர்களின் கருத்துக்களைப் பாராட்டவும், மேலும் புதிய யோசனைகள் மற்றும் அனுபவங்களை ஏற்றுக்கொள்ளவும் தயார்நிலையைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது.

பரந்த உலக மனப்பான்மையின் முக்கிய அம்சங்கள்:

அயல்நாட்டுக் கலாச்சாரங்களைப் பற்றிய அறிவு: பல்வேறு கலாச்சாரங்களைப் பற்றிய அடிப்படை அறிவு, அவற்றின் மதிப்புகள், பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் உட்பட.

திறந்த மனப்பான்மை: புதிய யோசனைகள் மற்றும் அனுபவங்களை ஏற்றுக்கொள்ளவும், மற்றவர்களின் கருத்துக்களைப் புரிந்து கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்.

மரியாதை: மற்ற கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகளுக்கு மரியாதை அளிக்க வேண்டும், அவற்றின் வேறுபாடுகளைப் பாராட்ட வேண்டும்.

புரிதல்: மற்றவர்களின் பார்வையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும், அவர்களின் அனுபவங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடர்பு: மற்ற கலாச்சாரங்களுடன் திறம்பட தொடர்பு கொள்ள வேண்டும், மொழி மற்றும் கலாச்சார தடைகளைத் தாண்டி.

பரந்த உலக மனப்பான்மையின் நன்மைகள்:

தனிப்பட்ட வளர்ச்சி: புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கும், உங்கள் சொந்த உலகப் பார்வையை விரிவுபடுத்துவதற்கும் உதவுகிறது.

தொழில்முறை வெற்றி: உலகளாவிய சந்தையில் வெற்றிபெற உதவுகிறது, பல்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் மற்றும் சக ஊழியர்களுடன் திறம்பட தொடர்பு கொள்ள உதவுகிறது.

AGARAM DHINES

சமூக நல்லிணக்கம்: வெவ்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்தவர்களைப் புரிந்து கொள்ளவும் மதிக்கவும் உதவுகிறது, சமூகத்தில் நல்லிணக்கத்தை மேம்படுத்துகிறது.

சர்வதேச உறவுகள்: நாடுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்த உதவுகிறது, உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகிறது.

பரந்த உலக மனப்பான்மை என்பது ஒரு முக்கியமான திறன், இது இன்றைய உலகத்தில் வெற்றிபெறவும், மகிழ்ச்சியாக வாழவும் அவசியம். இது ஒரு தொடர்ச்சியான கற்றல் செயல்முறை, இது அனுபவம், கல்வி மற்றும் மற்றவர்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் வளரக்கூடியது

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈச னெந்தை யிணையடி நீழலே.**

பொழிப்புரை :

இறைவனாகிய எந்தையின் திருவடி நீழல் குற்றமற்ற வீணையின் நாதமும் , மாலையிலே தோன்றிய நிலவின் தண்மையும் , வீசுகின்ற தென்றலின் சாயலும் , செறிந்த இளவேனிலின் மாட்சியும் , ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும்

**182. உண்டாலம்ம இவ்வுலகம்**

**பாடியவர்:** கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி (182). இவன் பாண்டிய மன்னர் குலத்தைச் சார்ந்தவன். சங்க காலத்துத் தமிழ் மன்னர்கள், தங்கள் கடற்படையைக் கொண்டு கடாரம், சாவகம், ஈழம் போற நாடுகளுக்குச் சென்று போர்புரிந்து வெற்றி பெற்றவர்கள். அவர்களின் கடற்படை போருக்குச் செல்லும் பொழுது மன்னர்களும் தம் கடற்படையோடு செல்வது வழக்கம். அவ்வாறு கடற்படையோடு இளம்பெருவழுதி சென்ற பொழுது, அவன் சென்ற கப்பல் கவிழ்ந்ததால் அவன் கடலில் மூழ்கி இறந்தான். ஆகவே, "கடலுள் மாய்ந்த" என்ற அடைமொழி அவன் பெயரோடு சேர்க்கப்பட்டுள்ளது.

இவன் புறநானூற்றில் உள்ள இப்பாடலை இயற்றியதோடு மட்டுமல்லாமல், திருமாலின் பெருமையைப் புகழ்ந்து பரிபாடலில் உள்ள 15-ஆம் செய்யுளையும் இயற்றியவன்.

**பாடலின் பின்னணி:** இப்பாடலில், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, மனித நேயத்தொடு "தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர்" உள்ளதால்தான் இவ்வுலகம் நிலைபெற்று இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற உயர்ந்த கருத்தைக் கூறுகிறான்.

**திணை:** பொதுவியல். எல்லாத் திணைகளுக்கும் பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறுவது.

**துறை:** பொருண்மொழிக் காஞ்சி . உயிர்க்கு நலம் செய்யும் உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுதல்.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

**அருஞ்சொற்பொருள்:**

3. தமியர் = தனித்தவர் முனிதல் = வெறுத்தல். 4. துஞ்சல் = சோம்பல். 6. அயர்வு = சோர்வு. 7. மாட்சி = பெருமை. 8. நோன்மை = வலிமை தாள் = முயற்சி.

**கொண்டு கூட்டு:** இவ்வுலகம் தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மை யானே உண்டு எனக் கூட்டுக.

பொருள்: இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும், அது இனிமையானது என்று தனித்து உண்ண மாட்டர்கள் யாரையும் வெறுக்க மாட்டார்கள் சோம்பலின்றிச் செயல்படுவார்கள் பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள் புகழ்வரும் என்றால் தம் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பர் பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைப்பதானாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் மனம் தளர மாட்டார்கள். இத்தகைய சிறப்புடையவர்களாகித் தமக்காக உழைக்காமல், பிறர்க்காக வலிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது.

**சிறப்புக் குறிப்பு:**

திருக்குறளில் பல அதிகாரங்களில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கும் கருத்துகள் இப்பாடலில் சுருக்கமாகக் கூறப்படிருக்கின்றன. குறிப்பாக, விருந்தோம்மபல், அன்புடைமை, வெகுளாமை, அறிவுடைமை, மடியின்மை, தீவினையச்சம், ஊக்கமுடைமை, புகழ், ஈகை, ஒப்புரவு, பண்புடைமை ஆகிய அதிகாரங்களின் மையக்கருத்துகளை இப்பாடலில் காணலாம். கீழே கொடுக்கபட்டுள்ள நான்கு குறட்பாக்களின் கருத்துகளுக்கும் இப்பாடலில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்துகளுக்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதைக் காண்க.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (குறள் - 82)

**பொருள்:** விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவா மருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தது அன்று.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது

அஞ்சல் அறிவார் தொழில். (குறள் - 428)

**பொருள்**: அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும் அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும்.

பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்

மண்புக்கு மாய்வது மன். (குறள் - 996)

**பொருள்**: பண்புடையவர்கள் பொருந்தி இருத்தலால் இவ்வுலகம் உளதாயிருக்கின்றது. அவர்கள் இல்லையேல் அது மண்ணினுள்ளே புதைந்து மறைந்து போகும்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள் - 212)

**பொருள்:** தான் முயற்சி செய்து ஈட்டிய செல்வமனைத்தும் தகுதியுடையார்க்குக் கொடுத்து உதவு செய்வதற்பொருட்டேயாம்.

**01. தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் எவை?**

- பரந்த உலக மனப்பான்மை

  யாதும் ஊரே யாவரும் கேளிர் - புறநானூறு

  யாதானும் நாடாமல் ஊராமல் - வள்ளுவம்
- விருந்தோம்பல்
- பிறரிடத்தில் அன்பு கொளல். (பிறரன்பு)
- ஈகை
- தமக்கென வாழாப் பிறர்குரியாளர் எனும் கோட்பாடு
- என் கடன் பணி செய்து கிடப்பதே
- அகத்திணை புறத்தினை மரபு
- மானமென்றால் உயிரைக் கொடுத்து காப்பாற்றும் வேட்கை
- மனத்தூய்மை
- விடாது முயலல்
- யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற நிகரற்ற மனநிலை
- உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம்.

**02. தொல்காப்பியர்கருப்பொருளில் கூறும் பண்பாட்டுத் துறைகள் எவை?**

- வழிபாடு
- இசை
- இசைக்கருவிகள்

“தெய்வம் உணவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிவ”

**கருத்து** – தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, யாழ் ஆகிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஏழும் தமிழர் பண்பாட்டுக் கருப்பொருள்கள்.

இந்த ஏழு கருப்பொருள்களின் ஒன்று யாழ், மற்றொன்று பறை

AGARAM DHINES

**யாழ்** - தொல்காப்பியம் கூறும் "யாழ்" என்னும் சொல் பழந்தமிழர் வகுத்த பண்ணிசையைக் குறிக்கும் இது மிடற்றிசை (குரிலிசை) நரம்புக் கருவியிசை (யாழ் என்னும் தந்திக் கருவி இசை) ஆகியவற்றின் முறைகளும் மரபுகளும் பற்றியதாகும்.

**பறை** – "பறை" என்னும் சொல் "தாளம்" பற்றியதாகும். அதாவது தாளத்தைக் கொட்டிக் கொடுக்கும் பல்வேறு தாளக் கருவிகளின் முறைகளும் மரபுகளும் பற்றியதாகும்.

**03. தமிழர் பண்பாடு கால அடைவில் பெரிதளவில் மாற்றங்களை அடையா விட்டாலும் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை கட்டுரையாசிரியர் எவ்வாறு நிறுவுகிறார். ஆதாரங்கள் தருக.**

- வட ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர், ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை என்பதாலும்.
- பிறசமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும், ஐரோப்பியக் கிறிஸ்தவரும், மகமதியாரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர் என்பதாலும்.
- இந்து சமயத்தின் வழிபாடு முறையும் இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம் பெற்றன என்பதாலும்.
- வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர் மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன என்பதாலும்.
- சுநீதிகுமார் சட்டர்ஜி இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு – திராவிட பண்பாடு என்று கூறுவதாலும்.
- சமணரியற்றிய சிலப்பதிகாரம், புத்தர் இயற்றிய மணிமேகலை , வீரமாமுனிவரியற்றிய தேம்பாவணி, உமறுப் புலவரின் சீறாப்புராணம் ஆகிய நூல்களை ஆராயும் போது இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளை கூறினாலும், தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளங்கியுள்ளனர் என்பது புலனாகிறது என்ற கூற்றுக்களாலும்.
- தமிழர் பண்பாடு பெரிதளவில் மாற்றடையாவிட்டாலும் வளர்ச்சியடைந்துள்ளது என்பது புலனாகிறது.

**04. பண்டைக்காலம் தொடங்கி தமிழ் மக்கள் வணிகத் தொடர்புகளை வைத்திருந்த நாடுகள் எவை?**

- மேற்றிசை நாடுகள்
- கீழ்த்திசை நாடுகள்
- இந்தியவின் வடபாகம்

**05. ரோமப் பேரரசில் யாரால் உலக மனப்பான்மை வளர்க்கப்பட்டது.**

இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டோயிக் வாதிகள் உலக மனப்பான்மையை வளர்த்தார்கள்.

06. சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி தமிழ்நாட்டில் உலக மனப்பான்மை பரவிலயுள்ளது என்பதற்கு கட்டுரையாசிரியர் தரும் ஆதாரங்கள் எவை?

**“யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும்**

**யாதானும் நாடாமல் ஊராமல்”** என்ற புறனானூற்றுப் படலடிகளும்,

- சமணம், புத்தம் போன்ற சமயங்களும் தமிழ்நாட்டில் வரவேற்கப்பட்டது என்பதாலும்,
- பார்ப்பனர், மொழிபெயர்த்தேயர்தார், யவனர், புலம்பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள் என்பதாலும்.
- சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி தமிழ் நாட்டில் உலகமனப்பான்மை பரவியிருந்தது என்பது புலனாகிறது.

**07. உலக மனப்பான்மை எவர்களின் கொள்கைகளுடன் முரண்பட்டிருந்தது?**

- வட ஆரியர், கிரேக்கர் போன்றோருடைய பண்டைக் கொள்கைகளுடன் முரண்பட்டே இருந்தது.
- அரிஸ்டோட்டில், பிளேட்டோ போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும் பிற மக்களை நாகரீகம் அற்றவர்கள் என்றும் கூறிவந்தனர்.
- வட ஆரியர் இயம மலைக்கும் விந்திய மலைக்கும் இடையேயுள்ள நிலம்தான் புண்ணிய பூமி என்று கருதினர்.

**08. கண்ணோட்டம் என்றால் என்ன?**

- உலக மனப்பான்மையில் இருந்து தோன்றிய வேறொரு இயல்பே கண்ணோட்டம் ஆகும்.

**09. பிறநாடுகளிலிருந்து வந்த சமயக்குரவர் தமிழர் பண்பாட்டைக் கடைப் பிடித்து இக்கண்ணோட்டத்துடன் இலக்கண, இலக்கிய மரபின்படியே நூல்களை யாத்தவர்கள் யாவர்?**

- வீரமாமுனிவர்
- கால்டுவெல்ஐயர்
- போப்பையர்

**10. இடைக்காலததில் வைணவர், சைவர் ஆகிய பார்ப்ன உரை யாசிரியர்கள் சமண நூல்களை இலக்கிய நூல்களெனக் கருதினார்கள் என்பதற்கு ஆதாரம் தருக.**

சமண நூல்களை இலக்கியங்கள் எனக் கருதி அவற்றின் மூலங்கட்கு நுட்பமான உரைகளை எழுதியமை.





AGARAM DHINES

**11. பக்திப் பாடல்களைப் பாடிய புலவர்கள் சிலரின் பெயர்களை தருக.**

- இராமலிங்கசுவாமிகள்
- அப்பர் சுவாமிகள்
- விபுலானந்த அடிகள்
- நாயன்மார்கள்
- சேக்கிழார்
- அப்பர் சுவாமிகள்
- பாரதிதாசன்
- ஆள்வார்
- கம்பர்

**12. பக்திப் பண்பு விளங்கும் தமிழ்க் கலைகள் எவை ?**

- தஞ்சாவூர்ப் பெரிய கோவில்
- கங்கை கொண்ட சோழப் புரம்
- இசைக்கலை
- பரதநாட்டியம்

**13. பக்தியால் இயற்றப் பெற்றவை அல்லது வளர்ச்சியுற்றவை எவை?**

- சிற்பக்கலை
- ஓவியக்கலை
- இசைக்கலை
- பரதநாட்டியம்

**14. தமிழ், பக்திப் பண்பாடு பிறநாட்டுக்கும் பரவியுள்ளன என்பதற்குக் காட்டப்படும் ஆதாரங்கள் எவை?**

- இந்தோனேசியாவிலிருக்கும் பிறம்பாணான் பானாத்தரான் கோயில்கள்
- கம்பச்சியாவிலிரக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள்
- தாய்லாந்தில் கொண்டாடப்படம் திருவெம்பாவைத் திருநாள்.
- உலகம் போற்றும்ஆடவல்லாரின் வடிவம்.

**15. அல்பேட் சுவைட்சர் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

- உலக நீதி இலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்தவர்.
- அரும்பெரும் நூல்களை இயற்றியவர்.
- வள்ளுவனின் திருக்குறளில் மிகுந்த ஈடுபாடுடையவர்.

AGARAM DHINES

- திருக்குறளை ஜேர்மன் மொழி பெயர்ப்பில் படித்தவர்.

**16. அல்பேட் சுவைட்சர் திருக்குளறைப் பற்றி யாது கூறுகின்றார்?**

திருக்குறளைப் போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காணப்பது அரிது என்கிறார்.

**17. மேனாட்டார் தமிழ் மக்களுடைய வாழ்க்கை ஞானத்தை எதனூடாக அறிந்தனர்?**

தமிழை முதற்கற்ற மேனாட்டார் அனைவரும் நம் நீதிநூல்களையே முதலில் மொழி பெயர்த்துத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை ஞானத்தை அறிந்து போற்றினார்கள்.

**18. தமிழர் பண்பாட்டில் ஒழுக்கத்தி பண்பு பற்றி விளக்குக.**

- ஒழுக்கம் தமிழர் பண்பாட்டில் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது.
- தமிழர் வாழ்க்கைக்குப் பெரும் அழகையும் மனநிறையும் நல்குகின்றது.
- தமிழ் மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாக தனி நாடுகளில் வாழ்ந்து செழித்தோங்குவதற்கும், அரசியல் வாழ்க்கைக்கும் இவ்வொழுக்கமே துணையாக அமைந்துள்ளது.

**19. மேல்நாட்டார் மக்கள் நலப்பண்பு நம் பண்பாட்டில் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது என்பது எவ்வாறு விளக்கப்படுகின்றது.**

நான் மனிதன், மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை என்ற இலத்தின் புலவர் ரெறனிஸின் கொள்ளையைக் குறிக்கோளாகப் போற்றுகின்றனர்.

**20. மேற்கூறிய மக்கள் நலப்பண்பு நம் பண்பாட்டில் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது என்பது எவ்வாறு விளக்கப்படுகின்றது.**

- மனிதனை என்றும் பேணவேண்டும்.
- ஒரு செயலால் வாழும் பிற நலன்களைக் கருதாமல் நன்மையை நன்மைக்காகவே செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகனாயலன் (புறம் - 134)
மேலுலகம் இன்றெனினும் ஈதலே நன்று என்றும் வற்புறுத்தியுள்ளார்.

**21. பண்டைக் கால இலக்கியங்களில் வாழ்க்கையின் நோக்கங்களாகக் கருதப்பட்டவை எவை?**

பண்டைக்கால இலக்கியங்களில் இவ்வுலக வாழ்க்கையையும் மக்களோடு இன்புற்று ஒழுகுவதும் இல்லறத்தின் இனிய நலன்களைக் காண்பதும் வாழ்க்கையின் நோக்கங்களாகக் கருதப்பட்டன.

**22. பின்வரும் நூல்களை இயற்றிய ஆசிரியர்களின் பெயர்களை முறையே எழுதுக.**

- தொல்காப்பியம் - தொல்காப்பியனார்





AGARAM DHINES

- சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
- மணிமேகலை - கூலவாணிகள் சீத்தலைச்சாத்தனார்
- தேம்பாவணி – வீரமாமுனிவர்
- சீறாப்புராணம் - உமறுப்புலவர்
- திருக்குறள் - திருவள்ளுவர்

07) தமிழ்ப் பண்பாடு என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

அ) தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் யாவை எனக் குறிப்பிடுக.

ஆ) அவற்றுள் உலக மனப்பான்மை என்ற பண்பாடு பற்றி விவரிக்குக.

**அ) தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் யாவை எனக் குறிப்பிடுக.**

- பரந்த உலக மனப்பான்மை
- விருந்தோம்பல்
- பிறரன்பு
- ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்
- என்கடன் பணி செய்து கிடப்பதே
- மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை
- மனத்தூய்மை, விடாமுயற்சி
- யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற மனநிலை
- உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்.

**ஆ) உலக மனப்பான்மை என்ற பண்பாடு பற்றி விவரிக்குக.**

- மேற்றிசை நாடுகளோடு கீழ்த்திசை நாடுகளோடும் இந்தியாவின் வட பாகத்தோடும் மண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்டமை.
- சங்க இலக்கியங்கள் காட்டும் வணிகச் செய்திகளுடாக
  ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்….’ என்ற மனப்பான்மையை வளர்த்தெடுத்தல்.
- சமணம், பௌத்தம் முதலிய சமயங்களை தமிழ்நாட்டில் வரவேற்றமை.
- பிற மக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழா பிறர்க்குரியாளன் என்னும் கோட்பாட்டை வளர்த்தமை.





AGARAM DHINES

2019

வினா இல – 06

தமிழர் பண்பாடு கட்டுரையில்,

அ) பக்தி

ஆ) ஒழுக்கம்

**அ) பக்தி**

- தமிழ் பக்தியின் மொழி
    - தமிழில் உள்ள அளவு போல் , வேறு எந்த மொழியிலும் பக்தி இலக்கியம் இல்லை.
    - பரிபாடல் முதல் விபுலானந்தர் ஈராகப் பக்திப் பாடல்களைப் பாடிய புலவர்கள் ஏராளமானவர்கள்
- தமிழில் பக்தியை உணர்த்தவென உள்ள சொற்கள் பல.
- பக்தி பாடல்களை பாடி இன்புறாத தமிழ் மக்கள் இல்லை.
- சங்ககால அகத்தணை இலக்கியம் பக்தி இலக்கியத்திற்குத் துணையாக அமைந்தமை.
- சமயப் பொருளற்ற பிற நூல்ககளுக்கும் பக்தி இலக்கியம் துணையாக அமைதல்.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள், சேக்கிழார், கம்பர், போன்றவர்களின் பக்திப் பண்பு உலகத்தில் நிகரற்றது.
- கோவில் கட்டிடம், சிற்பம், இசை, நாட்டியம் முதலான தமிழர் தம் பிற கலைகளும் பக்தியால் வளர்ச்சியுற்றவை.
- தமிழரின் பக்தி கடல் கடந்த நாடுகளிலும் பரவியமை.
- உலகம் போற்றும் நடராச வடிவம் தமிழரின் பக்தியின் பயனே. 5புள்ளிகள்.

**ஆ) ஒழுக்கம்.**

- தமிழர் பண்பாட்டில் நீதி / ஒழுக்கம் முக்கித்துவம் பெறுகின்றமை.
- திருக்குறளுக்கு இணையான நீதி நூல் உலகில் எங்கும் இல்லை என அல்பேட் சுவைட்சர் முதலான மேலைத்தேயத்தவர்களும் ஒத்துக் கொள்ளல்.
- தமிழில் ஈடுபட்ட மேனாட்டவர்கள் முதலில் தமிழ் நீதி நூல்களையே மொழி பெயர்த்தார்கள்.
- தமிழ் பெருந்தொகையான நீதி நூல்களைக் கொண்டது.
- இம்மொழியை பேசும் மக்களுக்கு கடவுளின் அருள் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். என போப்பையர் கூறுதல்.
- தமிழ் மக்கள் வேறு வேறு நாடுகளில் வாழ்ந்து செழித்து ஓங்குவதற்கும் அவர்களது அரசியல் வாழ்க்கைக்கும் ஒழுக்கமே துணையாக அமைந்தமை.
- 5 புள்ளிகள்

AGARAM DHINES